# Crisis Payment
# (நெருக்கடிநிலைக் கொடுப்பனவு)



We speak your language ☎ 13 1202



## Crisis Payment நெருக்கடிநிலைக் கொடுப்பனவு என்பது என்ன?

Crisis Payment (நெருக்கடிநிலைக் கொடுப்பனவு) ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் ஒரு விசேட கொடுப்பனவாகும். அது உங்கள் Centrelink-இன் (சென்டர்லிங்க்) வழமையான கொடுப்பனவுக்கு மேலாக வழங்கப்படும்.

## எதற்காக அது வழங்கப் படுகிறது?

Crisis Payment (நெருக்கடிநிலைக் கொடுப்பனவு) பின் வரும் சந்தர்ப்பங்களில் உங்களுக்கு வழங்கப்படலாம்.

- உச்ச நிலை நிகழ்வுகளாகிய குடும்ப வன்முறை அல்லது இயற்கை அழிவின் காரணமாக உங்கள் வீட்டை விட்டு அகலக் கட்டாயப்படுத்தப்பட்டு ஒரு புதிய வீட்டில் நீங்கள் அமரும்போது அல்லது அமரத் திட்டமிடும் போது,

அல்லது

- குடும்ப வன்முறைக்கு ஆளான பின்னர் குடும்பப் பொறுப்பாளர் இல்லத்திலிருந்து வெளியேறிய அல்லது அகற்றப்பட்ட நிலையில் நீங்கள் இல்லத்தில் இருக்கும்போது,

அல்லது

- ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு நீங்கள் சிறை அல்லது திருத்த நிலையமொன்றிலிருந்து குறைந்தபட்சம் 14 நாட்கள் சிறைவாசமிருந்த பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளபோது,

அல்லது

- தகுதியாக்கும் மனிதாபிமான விசாவில் அவுஸ்திரேலியாவிற்கு முதற் தடவையாக வந்திருக்க வேண்டும்.

## அதைப் பெற நான் உரித்துள்ளவனா?

Crisis Payment-க்கு லாயக்காக நீங்கள் கடும் பொருளாதாரக் கஷ்டத்தில் இருக்க வேண்டும், மற்றும் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு நிகழ்ச்சி நேர்ந்த ஏழு நாட்களுள் விண்ணப்பிக்க வேண்டும்:

- மிகவும் மோசமான சூழ்நிலையில், **அல்லது**
- குடும்ப வன்முறைக்குக் காரணமான நபர் வீட்டை விட்டு அகன்றுள்ள போது அல்லது வெளியேற்றப்பட்டுள்ளபோது, **அல்லது**
- சிறை அல்லது திருத்த நிலையத்திலிருந்து நீங்கள் விடுதலையான தேதியன்று, **அல்லது**
- தகுதியளிக்கும் மனிதாபிமான விசா ஒன்றில் அவுஸ்திரேலியா வந்த போது.

அத்துடன் நீங்கள் –

- சென்டர்லிங்க் இருந்து சமூக பாதுகாப்புக் கொடுப்பனவோ அல்லது ஓய்வூதியமோ பெற்றுக் கொண்டிருக்கவோ அல்லது பெறுவதற்குத் தகுதியுடையவராகவோ இருக்க வேண்டும். Parenting Payment (பிள்ளைவளர்ப்புக் கொடுப்பனவு), Newstart Allowance (புத்தாரம்ப் படி), Youth Allowance (இளைஞர்ப் படி), Disability Support Pension



Australian Government
Centrelink giving you options

(அங்கவீனர் உதவி ஓய்வூதியம்) மற்றும் Age Pension (வயோதிப ஓய்வூதியம்) அல்லது

- ABSTUDY Living Allowance (பூர்வீகக் குடிகளுக்கான கல்வி, வாழ்வு வசதிப் படி) ஆகியவை இதிலடங்கும்.

## நெருக்கடிக் கொடுப்பனவு எவ்வளவு?

நீங்கள் பெறவிருக்கும் Crisis Payment-இன் (நெருக்கடி நிலைக் கொடுப்பனவு) அளவு நீங்கள் பெறுவதற்கு லாயக்கான அடிப்படைச் சமூக பாதுகாப்பு நிதியின் ஒரு வாரக் கொடுப்பனவுக்குச் சமனாகும்.

**கவனிக்க:** Centrelink-இடம் இருந்து (சென்டர்லிங்க்) உங்களுக்குக் கிடைக்கும் கொடுப்பனவு Family Tax Benefit (குடும்ப வரி உதவித் தொகை) அல்லது Child Care Benefit (பிள்ளைக் கவனிப்பு உதவித் தொகை) ஆகியவை மட்டுமேயாயின் நீங்கள் Crisis Payment பெறத் தகுதிபெற மாட்டீர்.